# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

### Sessions Case No.7/2020

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | PW-2 |
| Name | : | சபரி |
| Father's / Husband Name | : | முருகேசன் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 23rd day of October 2025.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை:–**

மாருதிநகர் முதல் கிராஸ், பெரியகிணற்று தெரு, அம்மாபேட்டையில் குடியிருந்து வருகிறேன்.நான் டிப்ளமோ படித்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியாது. இறந்துபோன ஆறுமுகத்தை தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில், சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதி கோரியதன் பேரில், சாட்சி பிறழ்சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலீஸ் விசாரணையில் 03.02.2019 ம் தேதி மதியம் நானும் நெல்சன் பாலாவும், ஆறுமுகமும் வழக்கம் போல் எங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள துவக்கப்பள்ளியில் விளையாடிக் கொண்டிருந்தோம். அப்பொழுது எதிரி பரத்குமார் என்ற ஒருவன் என்னிடம் கொடுத்து பீடி வாங்கி வரச்சொன்னார் என்றும், நானும் நெல்சன் பாலாவும் சென்று மதியம் 3.45 மணிக்கு வாங்கிவந்தோம். அப்பொழுது ஆறுமுகம் பரத்குமாரை தகாத வார்த்தையால் திட்டினார் என்றும், அதற்கு பரத்குமார் எத்தனை நாளைக்கு தான் உன்னிடம் பேச்சுவாங்குவது இன்னைக்கு முடித்து கட்டிவிடவேண்டியது தான் என்று சொல்லி ஆறுமுகத்தை இடது கையால் வாயை அமுக்கி ஜன்னல் ஓரமாக போய் பரத் வைத்திருந்த பிளேடால் ஆறுமுகத்தின் கொதவளையை மாறிமாறி அறுத்தார் என்றும், வலதுகையிலும் இடது முன்கையின் மணிக்கட்டிலும், இடது காலிலும் அதே பிளேடால் அறுத்தார் என்றும், பிறகு ஆறுமுகத்தின் தலையைபிடித்து வேகமாக சுவற்று பக்கம் இடித்தார் என்றும், அதில்ஆறுமுகத்திற்கு பலத்த காயம் ஏற்பட்டு கீழே விழுந்தார் என்றும், நானும் நெல்சன்பாலாவும் அதை பார்த்து பயந்து கொண்டு ஆறுமுகத்தின் வீட்டிற்கு சென்ற அவரது அம்மாவிடம் கூறினோம் என்றும், பிறகு அவர்கள் ஆறுமுகத்தை G.H ஆட்டோமூலமாக துக்கிசென்றார்கள் என்றும், மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்ததாககூறிவிட்டு எதிரி தனது உறவினர் என்பதால் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

ஒம்/– S. எழில் வேலவன்
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, **சேலம்.**

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

### Sessions Case No.7/2020

| | |
|---|---|
| Deposition of witness for | : PW-3 |
| Name | : நெல்சன் பாலா |
| Father's / Husband Name | : பாலகிருஷ்ணன் |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 23rd day of October 2025.

**<u>எதிரி ஆஜர்.</u>**

**<u>முதல் விசாரணை:–</u>**

**முனிசிபல் காலணி அம்மாபேட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் கல்லூரியில் படித்து வருகிறேன். இறந்து போன ஆறுமுகத்தை தெரியாது. ஆஜர் எதிரியை தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு ஒன்றும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.**

**(அரசு தரப்பில், சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதி கோரியதன் பேரில், சாட்சி பிறழ்சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.)**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் போலீஸ் விசாரணையில் 03.2.2019 ம் தேதி மதியம் நானும் சபரி ஆறுமுகமும் வழக்கம் போல் எங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள துவக்கப்பள்ளியில் விளையாடிக் கொண்டிருந்தோம். அப்பொழுது எதிரி பரத்குமார் என்ற ஒருவன் சபரியிடம் கொடுத்து பீடி வாங்கி வரச்சொன்னார் என்றும், நானும் சபரியும் சென்று மதியம் 3.45 மணிக்கு வாங்கிவந்தோம். அப்பொழுது ஆறுமுகம் பரத்குமாரை தகாத வார்த்தையால் திட்டினார் என்றும், அதற்கு பரத்குமார் எத்தனை நாளைக்கு தான் உன்னிடம் பேச்சுவாங்குவது இன்னைக்கு முடித்து கட்டிவிடவேண்டியது தான் என்று சொல்லி ஆறுமுகத்தை இடது கையால் வாயை அமுக்கி ஜன்னல்ஓரமாக போய் பரத் வைத்திருந்த பிளேடால் ஆறுமுகத்தின் குறவளையை மாறிமாறி அறுத்தார் என்றும், வலதுகையிலும் இடது முன்கையின் மணிக்கட்டிலும், இடது காலிலும் அதே பிளேடால் அறுத்தார் என்றும், பிறகு ஆறுமுகத்தின் தலையைபிடித்து வேகமாக சுவற்று பக்கம் இடித்தார் என்றும், அதில்ஆறுமுகத்திற்கு பலத்த காயம் ஏற்பட்டு கீழே விழுந்தார் என்றும், நானும் சபரியும் அதை பார்த்து பயந்து கொண்டு ஆறுமுகத்தின் வீட்டிற்கு சென்று அவரது அம்மாவிடம் கூறினோம் என்றும், பிறகு அவர்கள் ஆறுமுகத்தை G.H ஆட்டோமூலமாக தூக்கிசென்றார்கள் என்றும், மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்ததாக கூறிவிட்டு எதிரி தனது உறவினர் என்பதால் உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இல்லை.

ஒம்/– S. எழில் வேலவன்
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
**சேலம்.**

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
------------
**II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.**

**Sessions Case No.7/2020**

Deposition of witness for : PW-4

Name : மோகன்

Father's / Husband Name : முனியப்பன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 23rd day of October 2025.

**<u>எதிரி ஆஜர்.</u>**

**<u>முதல் விசாரணை:–</u>**

குண்டுபிள்ளையார் தெரு, அம்மாபேட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் பீடாகடையில் வேலை செய்து வருகிறேன். அ.சா.2, அ.சா.3 யை எனக்குத் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு ஒன்றும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில், சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதி கோரியதன் பேரில், சாட்சி பிறழ்சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.)**

நான் போலிஸ் விசாரணையில் 03.02.2019 ம்தேதி பகல் 3.30 மணியளவில்

நான் கடையில் இருந்த போது இரண்டு சிறுவர்கள் ஒரு ரூபாய்க்கு பீடி கேட்டார்கள் என்றும் நான் அவர்களுக்கு தரமாட்டேன் என்று சொன்னேன். அவர்கள் பரத்குமார் அண்ணன் வாங்கி வரச் சொன்னார் என்று கேட்டார் என்றும், அதற்கு நான் கொடுத்து அனுப்பினேன் என்றும் கூறிவிட்டு தற்பொழுது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை</u>**

இல்லை

ஒம்/– S. எழில் வேலவன்
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
**சேலம்.**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

**Sessions Case No.7/2020**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | PW-5 |
| Name | : | அப்சர் |
| Father's / Husband Name | : | ஜக்கிரியா |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 23rd day of October 2025.

**<u>எதிரி ஆஜர்.</u>**

**<u>முதல் விசாரணை:–</u>**

சுப்பிரமணிய பாரதியார் தெரு, குஞ்சாகாடு அம்மாபேட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டும் வேலை செய்து வருகிறேன். 2019 ம் வருடம் ஒரு நாள் காலை 11.00 மணியளவில் நான் வாடகைக்கு சென்று வரும் போது அம்மாபேட்டை காவல்நிலையத்தார் என்னை அழைத்து ஆட்டோவில் இறந்து போன ஆறுமுகத்தை எடுத்து வந்தது போல் கூறச்சொன்னார்கள் பிறகு நான்அங்கிருந்து சென்றுவிட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில், சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதி கோரியதன் பேரில், சாட்சி பிறழ்சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.)**

நான் போலிஸ் விசாரணையில் 03.02.2019 ம்தேதி பகல் 4.15 மணியளவில் டி.வி.கே ரோட்டின் சித்தேஸ்வரா நஞ்சம்பட்டி ரவுண்டாவிற்கு சென்று கொண்டிருந்தபோது ஸ்டேசன் அருகே மார்க்கெட் தெரு சந்திப்பில் காயத்துடன் ஒரு சிறுவனை இரண்டு பெண்கள் தூக்கிவந்து ஆட்டோவில் ஏற்றி சேலம் அரசு மருத்துவமனைக்கு போகச்சொன்னார்கள் என்றும், நான் இறந்த ஆறுமுகத்தை சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டேன் என்றும், அது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள் என்று கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு பயந்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை</u>

இல்லை

ஒம்/– S. எழில் வேலவன்
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
**சேலம்.**